ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2074/9 - 2018 ජූනි මස 04 වැනි සඳුදා - 2018.06.04
*2074/9 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது இல.: சீஓ/எச்வீ/ஜீ/2017/536.*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தின், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில், 593 வெதர கிராம அலுவலர் பிரிவில் வேதர கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அதிபதியால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப கடஸ்தர இல. 520030, தொகுதி இல. 01, தாள் இல. 51 மற்றும் 2017.08.28 ஆந் திகதி எனக் குறிப்பிடப்பட்டுள்ள 0.1122 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டுகள் (3) மூன்றின் விபரங்கள் பின்வருமாறு:

***1. துண்டு இல. 190***

காணியின் பெயர் : கஹடகஹவத்தே கனத்த எனும் கஹவத்தே கட்டிய; விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடம் மற்றும் நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி காணப்படுகின்றது; ஆரம்ப உரிமை கோருபவர் : அரசு; உரிமை கோருபவர் : தோன தீபானீ அபேசிங்ஹ, இல. 183, பொல்கஸ்ஓவிட, வேதர; விஸ்தீரணம்: 0.0307 ஹெக்டயார்.

***2. துண்டு இல. 193***

காணியின் பெயர் : கஹடகஹவத்தே கனத்த எனும் கஹவத்தே கட்டிய; விபரம்: வீட்டுத்தோட்டம் ; ஆரம்ப உரிமை கோருபவர் : அரசு; உரிமை கோருபவர் : தோன தீபானீ அபேசிங்ஹ மற்றும் கும்புககே ஜயசிறி பெரேரா, இல. 183, பொல்கஸ்ஓவிட, வேதர; விஸ்தீரணம்: 0.0106 ஹெக்டயார்.

***3. துண்டு இல. 194***

காணியின் பெயர் : - ; விபரம்: வீதி ; ஆரம்ப உரிமை கோருபவர் : அரசு; உரிமை கோருபவர் : கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம் : 0.0030 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹோமாகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018ஆம் ஆண்டு யூன் மாதம் 10ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

புத்தி தரங்கா கருணாசேன,
பிரதேச செயலாளர்,
ஹோமாகம.

பிரதேச செயலகம்,
ஹோமாகம,
2018, மே 30.

*6 - 761/1*

திருத்தம்

**காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: *3/3/2/94.*

*2017* ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் *07* ஆந் திகதிய *2013/33* ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ரிலாவல கிராமத்தில், ஹோமாகம பிரதேச செயலகப் பிரிவில், கொழும்பு மாவட்டத்தில், மேல் மாகாணத்தில், ஆரம்ப கடஸ்தர இல. *520024*, தாள் இல. *06*, பக்க இல. *6*, விபரங்கள் கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகிறேன்.

*01.* **துண்டு இல.** ***146***

காணியின் பெயர் : கெடகெலகஹவத்த; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர் : தனவீர அச்சிகே மலித் குணரத்ன ; விஸ்தீரணம்: *0.0237* ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக *2018* ஆம் ஆண்டு யூன் மாதம் *18* ஆந் திகதி மு. ப. *10.00* மணிக்கு ஹோமாகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் *2018* ஆம் ஆண்டு யூன் மாதம் *11* ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

புத்தி தரங்கா கருணாசேன,
பிரதேச செயலாளர்,
ஹோமாகம.

பிரதேச செயலகம்,
ஹோமாகம.

*6 - 761/2*